# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35. வ.ஆ. 2007 தை 7 முஹறம் 18, (21-1-76) புதன் புத்தகம் 29 இதழ் 28


# 'நேர்மையாளர் இலட்சியவீரர் நெறிதவருக்கொள்கையாளர்'

## மறைந்த தலைவருக்கு தந்தை செல்வா அஞ்சலி!

● அமரர் மாணிக்கவாசகர்



தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், 'கல்குடாத் தொகுதி மக்களின் நெஞ்சம் நிறைந்தவருமான அமரர் பொன்னையா மாணிக்கவாசகரின் பூதவுடல், தலைவர்களும், கட்சித்தொண்டர்களும், பொதுமக்களும் துயரம் தாங்காமல் ஓலெனக் கதறியழுதிட செங்கலடியிலுள்ள கொடுவாமடு சுடும்பமயானத்தில் 17-1-76 சனிக்கிழமை மாலை எரியூட்டப்பட்டது!

''நேர்மையும், கட்சிமீது விசுவாசமும், இலட்சியப் பிடிப்பும் கறைபடியாக்கரமும் கொண்ட கிழக்கு மாகாணத்தலைவர்கள் ஒவ்வொருவராக இப்படியே மறைவது என்னை ஆழ்ந்த துக்கத்திலாழ்த்துகிறது. அமரர் இராசமாணிக்கம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் எமது இயக்கத்துக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு மாணிக்கவாசகரின் மறைவு ஆகும். அமரர் மாணிக்கவாசகரின் குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவித்துக் கொள்ளுகிறேன்''

—இவ்வாறு சுகவீனமுற்றிருக்கும் தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா மாணிக்கவாசகரின் பிரிவு குறித்து விடுத்துள்ள விசேட இரங்கற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். சுகவீனம் காரணமாக தந்தைசெல்வா அவர்களால் திரு. மாணிக்கவாசகரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளமுடியாமற்போய்விட்டது.

தைப்பொங்கலன்று தமிழ் மக்களுக்குப் பேரிடியைத் தந்துவிட்டுத் திரு. மாணிக்கவாசகர் மாரடைப்பு நோயினல் திடீரெனக் காலமானர். மாணிக்கவாசகரின் மறைவுச்செய்திகேட்டதும், தமிழ் மக்கள் பலவிடங்களிலும் துக்கம் தோய்ந்த முகத்தினராய்க் கறுப்புக் கொடிகளையும் வெள்ளைக் கொடிகளையும் பறக்கவிட்டனர். விசேடமாக கல்குடாத் தொகுதியிலும், மட்டக்களப்புத்தொகுதியிலும் கடைகள் பூட்டப்பட்டு, கறுப்பு, வெள்ளைக்கொடிகள் உயர்த்தப்பட்டு பூரணதுக்கம் அனுட்டிக்கப்பட்டது. சாரிசாரியாக ஆயிரக்கணக்கான மக்கள் திரு. மாணிக்கவாசகரின் இல்லத்துக்குச்சென்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக மறைந்த தலைவருக்கு தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

—3-ம் பக்கம் பார்க்க

# தமிழ் ஈழத் தீர்மான நாளன்று ஊரடங்குச்சட்டம் அமுல்? தமிழ் ஈழமெங்கும் பொலீஸ் குவிப்பு!

தமிழ் ஈழத்தீர்மான நாளான பெப்ரவரி 4ம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் ஹேஷ்யம் கூறப்படுகிறது. இதேவேளையில் தமிழ் ஈழத்தில் விசேட பொலீஸ் படையும் ஆயுதப் படையும் அதிகரிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

தமிழ் ஈழத்தீர்மானம் தேசிய அரசப் பேரவையில் எடுக்கப்படும் பெப்ரவரி 4ம் நாள் தமிழ் ஈழமடங்கிலும்

- தமிழ் ஈழத்தின் தேசியக் கொடியென்று கருதப்படும் உதய சூரியன் கொடிகளை ஊருக்கு ஊர் பரவலாக ஏற்றிவைப்பது—
- தமிழ் ஈழத் தேசிய கீதத்தை மக்கள் கூடி நின்று இசைப்பது—
- தமிழ் ஈழத்தீர்மான விளக்கக் கருத்தரங்குகளை ஊருக்கு ஊர் நடத்துவது—
- சுதந்திரத் தமிழ் ஈழம் அமைத்திட உறுதி எடுப்பது—
- தமிழ் மாணவ மாணவியர் உதய சூரியன் சின்னங்கள் அணிந்து அன்றைய தினம் பாடசாலைக்குச் செல்வது—
- தமிழர் கூட்டணி பா. உ. க்கள் உதய சூரியன் சின்னம், உதய சூரியன் சால்வை ஆகியவற்றை அணிந்து தேசிய அரசப் பேரவைக்குச்செல்வது-

என்பன போன்ற செயல் திட்டங்களை தமிழர் கூட்டணி வகுத்துள்ளது. இத் திட்டங்களை நடைமுறைப்படுத்த எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் யாவும் சுறுசுறுப்புடன் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் உதய சூரியன் சின்னத்தைத் தயாரித்துமாணவமாணவிகளுக்கு வழங்கவிருக்கின்றனர்

## பொலிசார் அவதி!

சகல விசாரணைகளையும் பதிவேடுகளையும் தமிழில் வைக்கும்படி நீதியமைச்சு உத்தரவிட்டதைத் தொடர்ந்து வட பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்கள் தமிழில் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்குரிய தமிழ்ப் பத்திரங்கள், போதியளவு இன்றி தமிழ்ப் பொலிசார் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. பொலிசார் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்குரிய தமிழ்ப் படிவங்களை இதுவரையில் பொலிஸ் திணைக்களம் வட பகுதிப் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவில்லையென்றும் அறியப்படுகிறது.

## ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம்!

கண்டி கட்டுகலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் வியாழக்கிழமை (22-1-76) சகஸ்ர சங்காபிஷேகம் (ஆயிரத்தெட்டு சங்கு) நடைபெறுகிறது.

# நினைவுச் சின்னத்தை உடைத்தவர்கள் இனவெறிபிடித்த ஆட்சியாளர்களே!


## கதிரவேற்பிள்ளை பகிரங்கக் குற்றச்சாட்டு!

'இனவெறி காரணமாக அரசாங்கமே தன் உத்தியோகத்தர்கள் மூலம் தமிழ்த்தியாகிகளுக்கு நிறுவப்பட்டிருந்த நினைவுச்சின்னத்தை உடைத்தெறிந்திருக்கிறது. அந்தச் சின்னத்தை நாம் மீண்டும் திருப்பிக்கட்டுவோம். அதனை அரசாங்கம் தடுக்குமானல், இப்பிரச்சினையை ஒரு சட்ட மறுப்பு இயக்கமாக மாற்றி ஒரு இடத்தில் மட்டுமல்ல ஆயிரம் இடங்களில், அரசாங்க நிலத்தில் ஆயிரம் நினைவுச் சின்னங்களை நிறுவுவோம்!''

—இவ்வாறு கோப்பாய் பா. உ. சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியிருக்கிருர்.

உலகத் தமிழ் மாநாட்டில் 1974 சனவரி 10ம் நாள் பொலிசாரின் வெறித்தாக்குதலின் விளைவாக உயிரிழந்த தமிழ்த்தியாகிகளின் நினைவாக தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் 9-1-76 வெள்ளிக்கிழமை காலை யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன் நிறுவிய நினைவுச் சின்னம், 12-1-76 இரவு இடித்துத் தள்ளப்பட்டுக் காணப்பட்டது. தமிழ்த்தியாகிகள் நினைவுச்சின்னம் இடிக்கப்

— 4-ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# சிங்களவர் இலங்கையில் குடியேறியபோது அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களே!

தமிழ்த் தலைவர்களும், அவர்களைச் சார்ந்த பிரதிநிதிகளும், தம்மை ஓர் சிறுபான்மையினத்தின் அங்கத்தவர்கள் என்று கூறிக் கொள்ளப்படுவதை வன்மையாக எதிர்ப்பதோடு, தாம் ஓர் தனிநாட்டவர்கள் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்கள். இந்நாட்டின் புராதன குடியேற்றங்கள் பற்றிய தகவல்களும், அரசியல் வரலாறுகளும் சற்று மங்கியதாகவே காணப்பட்டபோதிலும், இரு பகுதியினையும் சேர்ந்த புராணக் கதை வல்லுனர்களால் மேலும் உண்மைகள் மூடி மறைக்கப்பட்டிருந்தன. எது எவ்வாறிருந்த பொழுதிலும் கிறிஸ்துவுக்கு முன் 5 அல்லது 6ம் நூற்றாண்டுகளில் ஆரிய (சிங்கள) குடியேற்றங்கள் இங்கு தொடங்கிய பொழுது திராவிடர்களும் (தமிழர்) அங்கு இருந்தார்கள் என்ற உண்மையை எவ்விதத்தகராறுகளுக்கும் அப்பாற்பட்ட விதத்தில் வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

முதல் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களாகிய போர்த்துக்கேயர்கள் 16ம் நூற்றாண்டளவில் இத்தீவை அடைந்த போது வடக்கில் அமைக்கப்பட்டிருந்த தனியான தமிழ் இராச்சியங்களையும், தெற்கில் நிறுவப்பட்டிருந்த சிங்கள இராச்சியங்களையும் கண்டனர். போர்த்துக்கேய ஆதிக்கத்தின்போதும், அவர்களைத் தொடர்ந்து ஆட்சி செய்த ஒல்லாந்தர் ஆளுகையின் போதும் இவ்விராச்சியங்கள் தனித்தனி நாடுகளாகவே தம்மைப் பரிபாலித்து வந்தன, எனினும் 19ம் நூற்றாண்டில் அப்போது ஆட்சி பீடத்தில் இருந்த பிரித்தானியர்களால் முதன் முறையாக ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பதாக இரு இனத்தினையுமே சேர்ந்த தலைவர்கள் சுதந்திரத்திற்கான ஓர் புதிய அரசியல்சட்டவமைப்பினை யாத்த போது தமிழர்கள், இங்கிலாந்தில் உள்ள சிறுபான்மையினரான, ஸ்கொட்டிஷ், வேல்ஸ் போன்ற மக்களின் அதே நிலையோடு தாமும் கருதப்படுவோம் என்றே எதிர்பார்த்தனர். ஆனால் எதிர்பார்த்தற்கு மாருக ஏற்பட்ட ஏமாற்ற உணர்ச்சிகளினால், உலகின் ஏனைய தேசியவாத இயக்கங்களைப் போன்று. தமது தேசிய உணர்வுகளையும், மிகக்குறுகிய காலத்திலேயே கட்டி எழுப்பினர்.

தமிழர்களும், சிங்களவர்களும் இந்தியாவில் இருந்தே வருகை தந்தவர்கள். புராதன, வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே இலங்கை இந்தியாவின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாகவே இருந்துவந்தது. இலங்கையின் பூர்வீகக் குடிகளான வேடர், நாகர், இயக்கர் என்போர் இந்திய மாநிலத்தில் இருந்துநடந்தே இங்குவந்து குடியேறினர் என்று கருதப்படுகிறது இது போன்றே சிங்களவர்களின் மூல வரலாறும் கி. மு. 5 அல்லது 6ம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் இருந்து விஜயனின் தலைமையின்கீழ் இடம்பெயர்ந்த ஆரியர்களின் வருகையோடு தொடர்புறுத்தப்பட்டிருக்கிறது. தமிழர்களின் மூதாதையர்களான திராவிடர்களும் அப்போது அங்கிருந்தனர் என்பதை தற்போது காணக் கிடக்கும் முன்னைய வரலாறுகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. இது மாத்திரமல்ல, திராவிடர்கள்தான் இந்நாட்டின் ஆதிக்குடிகள் எனத்தற்கால அறிவியல் வல்லுனர்கள் சிலர் தீவிரமாக வலியுறுத்துவதையும் நாம் காணலாம்.

இன்றைய சிறுபான்மையினப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட புராதன வரலாறுகளில் பெரும்பாலானவை உண்மைக்கப்பாற்பட்டவிதத்தில், சிங்கள சமூகத்தால் சிருஷ்டிக்கப்பட்ட புராணக்கதைகளுடன் தொடர்புறுத்தப்பட்டிருக்கின்றன, பூர்வீகச் சிங்களக் குடிகளின் வரலாற்று விபரங்கள் கி. பி. 5ம் நூற்றாண்டில் பௌத்த பிக்குகளால் தொகுக்கப்பெற்ற மகாவம்சம் என்ற சரித்திர நூலை அடிப்படையாக வைத்தே புனையப்பட்டிருக்கின்றன.

இக்கூற்றின்படி இந்திய இளவரசி ஒருத்திக்கும், வனவிலங்கான சிங்கத்திற்கும் பிறந்தவனான விஜயன் என்பான், தன் எழுநூறு தோழர்களுடனும், இத்தீவின் வடமேற்குக் கரையோரத்தில் உள்ள தம்பண்ணை எனும் இடத்தில் தரையிறங்கினான் என அறியவருகிறது. இடைச்செருகப்பட்டிருந்த இத்தகைய கற்பனைக் கதைகளோடு. மேலும் சேர்க்கப்பட்ட வரலாற்றுக் காலத் தொகுப்பு நிகழ்ச்சிகளில் புத்தரின் மரணமும், சிங்கள இனத்தின் தோற்றமும் ஒரே சமயத்தில் நிகழ்ந்ததாகப் பிறிதோரிடத்தில் வரையப் பெற்றுள்ளது;

1950ம் ஆண்டளவில் ஓர் பிரபல சிங்கள எழுத்தாளர் இதுபற்றிக் குறிப்பிடுகையில் "புத்த பகவானின் ஒளி விளக்கை உலகிற்குக் கொண்டுவரும் ஓர் இனமாகவே தாம் உருவாக்கப்பட்டதாக நீண்ட காலமாக சிங்கள மக்கள் நினைத்துவந்துள்ளனர்" என விளம்பியுள்ளார். இதனுடைய உள்நோக்கம், பௌத்த மதத்தின் பாதுகாவலர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இனம் சிங்கள இனத்தினரே என்பதை வலியுறுத்துவதே!

இதுமட்டுமின்றி மத விரோத சக்திகளிடம் இருந்து சிறீலங்காவைப் பாதுகாக்கும் பணி கடந்த காலங்களிலும் சரி நிகழ்காலத்திலும் சரி தங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கருதுகின்றனர். தமிழர்களை விரட்டியடித்த துட்டகைமுனுவின் செயலும் மதரீதியில் நடந்த ஒன்றே எனலாம். இன்றும் கூட சிங்களப் பாடசாலைகளில் தமிழர்களைப் பற்றிய வரலாறுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அவர்களை, மதவிரோதிகள், ஆக்கிரமிப்பாளர்கள். எதிரிகள் என்றே அறிமுகப்படுத்துகிறார்கள்.

வட இலங்கைக்குச் சமீபமாகத் தென்னிந்தியாவில்

## விக்டர் சுவேஸ் அறிக்கை

உள்ள 5 கோடித் தமிழர்களையும் தமக்கேற்பட்ட பயமுறுத்தலாக இவர்கள் நினைப்பதால் சிங்களத் தீவிரவாதம் தலைதூக்க இது வழி வகுக்கிறது. கடந்த பல நூற்றாண்டுகளாக, சிங்கள மன்னர்கள் தம் இராச்சியங்களைத் தெற்கு நோக்கித் திசைதிருப்புவதற்கு மூல காரணம், தென்னிந்தியாவில் இருந்துவரும் தமிழர்களின் படையெழுச்சிகளைத் தவிர்ப்பதற்கேயாகும்.

இதனைத் தொடர்ந்து 13ம் நூற்றாண்டில் சிங்களவர்கள் தமதுதலைநகரத்தைத் தென்மேற்குப் பிராந்தியத்தை நோக்கி நகர்த்தினார்கள். பின்னர் இது மத்திய தெற்குப் புறப் பிரதேசமான கம்பளையில் நிறுவப்பட்டது. போர்த்துக்கேயர்கள் இந்நாட்டில் நுழைந்தபோது, காடுகளினாலும், மலைகளினாலும் பிரிக்கப்பட்ட இரு தனியான வெவ்வேறான நாடுகளையே கண்டறிந்ததாக சரித்திரம் சான்று பகர்கின்றது.

இத்துடன் நில்லாது தென்னிலங்கையை ஆட்சிசெய்த சில மன்னர்கள் பெயரளவில் சிங்களவர்களாக இருந்தனரேயொழிய உண்மையில் ஒரு சிலர் தமிழர்களாகவே இருந்தனர் என்றும் அறியப்படுகின்றனர். புராண வரலாறுகளில் இருந்து இரு பகுதியினருமே யுத்தம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துவந்தனர் என்பது புலனாகிறது. இவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது, "மகாவம்சத்தில்" எடுத்துக்கூறப்பட்ட துட்டகாமினி — எல்லாளன் சண்டையாகும். இருவருக்கும் இடையில் நடந்த தனிப்பட்ட போரின்போது எல்லாளன் எறிந்த அஸ்திரத்திற்கு ஈடு கொடுத்துத் தப்பிய துட்டகாமினி தன் யானையின் தந்தங்களினால் எல்லாள மன்னன் வீற்றிருந்த யானையை குதறித் தள்ளினான். இதனை எதிர்பாராத எல்லாளன் நிலைகுலையவே துட்டகாமினியின் கணையொன்று எல்லாளனை நோக்கிப் பீறிடவே எல்லாள மன்னன் தன் யானையுடன் சேர்ந்து கீழே வீழ்ந்து மாண்டதாக அது விபரிக்கிறது.

போர்த்துக்கேய நிர்வாகத்தின் (1594—1638) போது அறிமுகப்படுத்தப்பட்ட கிறிஸ்தவக் கல்வி முறைமையானது தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின் போதும் பேணிப்பாதுகாக்கப்பட்டது. இதன்விளைவாக சிங்கள, தமிழ் வகுப்பாரிடையே படித்த வகுப்பினர் தோன்றுதற்கு இது வித்திட்டது. போர்த்துக்கேயரைத் துரத்தியடித்த பின் ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தர் (1638—1796) முற்றிலும் வர்த்தக நோக்கத்திற்காகவே இலங்கையை ஆண்டனர். இவர்கள் இலங்கையை விட்டுச் சென்ற போது "ரோமன் டச்சுச் சட்டம்" என்றழைக்கப்படும் நீதி முறைமையையும், இவர்களின் கலப்பால் உருவான "பறங்கியர்" என்ற சாதியினரையும் மட்டுமே தமது ஞாபகார்த்தமாக விட்டுச் சென்றனர். 1815ம் ஆண்டில் பிரிட்டிஷார் இந்நாட்டை ஒரே நாடாக உருவாக்கு மட்டும், வடபகுதியில் தமிழர்களினால் நிர்வாகிக்கப்பட்ட தமிழ் இராச்சியமும், தாழ் நிலப்பிரதேசச் சிங்கள மக்களுக்கெனத் தெற்கில் ஓர் இராட்சியமும் மத்திய மலைநாட்டுப் பிரதேசத்தில் ஓர் கண்டிய இராச்சியமும் இத்தீவைப் பரிபாலித்துவந்தன.

பிரிட்டிஷ் பரிபாலனத்தின் போது இடம் பெற்ற மிக முக்கிய நிகழ்ச்சி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரும் தொகையினரான தோட்டத் தொழிலாளராவர். 1911ம் ஆண்டு வாக்கில் எடுக்கப்பட்ட கணிப்பின்படி இலங்கைத் தமிழர்களை விட (528024) இந்தியத் தமிழர்களின் தொகை (530983) சற்றுக் கூடுதலாகவே காணப்பட்டது. கோப்பி, தேயிலை, றப்பர் போன்ற வர்த்தகப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்நாட்டை வளமிக்க சுபீட்சம் நிறைந்ததாக மாற்றும் பணிக்கு அத்திவாரமாக இத்தொழிலாளர்களின் மலிவான உழைப்புப் பயன்பட்டபோதிலும், மனிதாபிமான அடிப்படையில் நோக்குங்கால் இவர்களின் நிலைமை அடிமைகளிலும் பார்க்க ஒரு சிறிதளவு மாத்திரமே மேம்பட்டதாகக் காணப்பட்டது. எனினும் தோட்டப் பொருளாதார வர்த்தகத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக நாளடைவில் மருத்துவம், கல்வி, இருப்பிடம்போன்றசிலவாழ்க்கை வசதிகள் இத்தொழிலாளருக்கும் கிட்டவே மலைநாட்டுப் பிரதேசங்களில் பரவலானமுறையில் பெருக ஆரம்பித்தனர். இது கண்டிய வம்சாவழிச் சிங்களவர் மத்தியில் வெறுப்பு விதைகளை வித்தூண்டுவதற்கு வழி கோலியது: மேலும் தோட்டங்கள் எண்ணிக்கையில் பெருகப் பெருக கண்டியச் சிங்களவர்களின் மத்தியில் காணிப் பஞ்சம் ஏற்படலாயிற்று. இதுவுமன்றி தோட்டத்தொழிலாளர்களின் நிலையும், தம்மைச் சுற்றி இருந்த சிங்கள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிடுகையில் சற்று உயர்வானதாகவே காணப்பட்டது.

ஆனால் சுதந்திரத்திற்குப்பின்னர் இந்நிலைமை மாற்றமடைய ஆரம்பித்ததோடு, இந்தியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிக்கப்பட்டுச் சிங்களவர்களின் கரங்களுக்குப் போய்ச்சேர்ந்தன. கொழும்பில் உள்ள அரசியல்வாதிகளோவெனில் பொருளாதாரச் சமத்துவம் என்ற பெயரில் கண்டியச் சிங்களவர்களுக்கு அனுசரணையான முறையில் சட்டங்களை இயற்றியதுடன் அவர்களுக்குதவியாக பல அபிவிருத்தி, கல்வித்திட்டங்களை மலைநாட்டுத் தமிழர்களின் நலன்களைப் பணயமாக வைத்து உருவாக்கினர்.

## தமிழ் ஈழம் தனிநாடாக இருந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் நிரம்ப உண்டு!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமரர் மாணிக்கவாசகர் அசையாத கொள்கைக்குன்று

## சிங்கள வெள்ளத்தினின்றும் கல்குடாத் தொகுதியை காத்துநின்ற மாவீரர்!

'தமிழ் பேசும் மக்கள் கோரும் தமிழரசு ஏற்பட்டு, அவ்வேளை தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அமைச்சர் அவை அமையப் பெறுமானல், அந்த மந்திரி சபையில் காணி, காணி அபிவிருத்தி — நீர்ப்பாசனம் முதலியவற்றைக் கண்காணிக்கும் அமைச்சராக இருக்கவல்லவர் திரு. பொன்னையா மணிக்கவாசகர் ஒருவரே' என்று தமிழரசுத் தந்தை உட்பட காலஞ்சென்ற அமரர் திரு. மாணிக்கவாசகரை அறிந்த பலரும் கூறுவதுண்டு.

வீண் ஆடம்பரம் எதுவுமின்றி மிகவும் அமைதியாகவும், அடக்கமாகவும் இருந்துகொண்டு ஆளமான காரியங்களை முடித்துக்கொள்ளுவதில் மிகவும் திறமைசாலியான திரு. மாணிக்கவாசகரின் அரிய பல தொண்டுகளை பலரும் அறியமாட்டார்கள்.

அரசாங்க நில அளவைப் பகுதியினர்க்கோ, நீர்ப்பாசன இலாகாவுக்கோ தெரிந்திராத பாழடைந்த தூர்ந்துபோய்க் கொடிய வனத்தின் நடுவே இருக்கும் பண்டையப் பெருமை வாய்ந்த குளங்களைப்பற்றிய தகவல்கள் யாவும் திரு. மாணிக்கவாசகருக்கே தெரியும், கிழக்கு மாகாணத்திலுள்ள எந்த அரசாங்க மேலதிகாரியும் நீர்ப்பாசன கிருஷிகத்துறையில் திரு. மாணிச்கவாசகரை முறியடித்துவிட முடியாது:

கற்குடாத் தொகுதியை சிங்களக்குடியேற்றத்தினின்றும் தடுத்துக் காப்பாற்றியது மட்டுமன்றி இலட்சக்கணக்கான ரூபா செலவில் வடமுனை குடியேற்றத் திட்டத்தை உருவாக்கி, காணியற்ற தமிழர்களை அதில் குடியேற்றிய செயல் வீரர் இவர்.

மட்டக்களப்பு மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களில் சகல புள்ளி விபரங்களையும் தொகுத்துக்கொடுத்து அதிகாரிகளையே திணறவைத்துவந்தவர் திரு. மாணிக்கவாசகர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மனிதரே புகமுடியாத காடடர்ந்த பிரதேசங்களுள், துப்பாக்கியைத்துணையாகக் கொண்டு, அலைந்து திரிவதே திரு. மாணிக்கவாசகரின் பொழுதுபோக்காக இருந்துள்ளது.

தமது கல்லூரிப்படிப்பை முடித்துக்கொண்டதும் காடு சுற்றும் பணியை மேற்கொண்ட திரு. மாணிக்கவாசகர் தமிழ் ஈழத்தினை மீண்டும் ஒரு 'தானியக்களஞ்சிய'மாக அமைக்க ஏதுவான—பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யக்கூடிய திட்டங்களை கொடுத்துள்ளார். ஆட்சியின் பாரபட்சக் கொள்கைகளால் அவருடைய திட்டங்கள் பலநிறைவேற்றப்படாமலே போய் விட்டன.

அமைதியும், அடக்கமும் கொள்கைப்பற்றும் நிதானமும், நிறைந்த மாணிக்கவாசகர் கறைபடியாத கரமுடையவர். தமிழரசுக்கட்சியின் விசுவாசமிக்க ஊழியராக உழைத்தவர். 1956ம் ஆண்டு காலிமுக சத்தியாக்கிரகம், 1961ம் ஆண்டு அரசாங்க அலுவலக மறியல் போராட்டம் ஆகிய அனைத்துப் போராட்டங்களிலும் பங்குபற்றி தடுப்புக்காவலிலும் இருந்தவர். 1960ம் ஆண்டுநடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் கல்குடாத் தொகுதியில் வெற்றிபெற்று மக்கள் தலைவராக இடம் பெற்றிருந்தவர் அமரர் மாணிக்கவாசகர்.

1958ம் ஆண்டு இவருடைய வீட்டில் தமிழரசுக்கட்சியின் அதிமுக்கிய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், வீட்டின் மீது சிங்கள இன வெறியன் ஒருவனால் எறிகுண்டு வீசப்பட்ட சம்பவம், விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே மறக்க முடியாதது.

'குடும்பக் கட்டுப்பாடு தமிழர் குலத்துக்குக்கேடு' என்பதை உணர்ந்து. பத்துத் தமிழ்ச் செல்வங்களை பெற்றெடுத்த இவர் தமிழர் நெஞ்சமெலாம் நிறைந்தவர்.

அமரர் மாணிக்கவாசகரின் தொண்டு தமிழர் விடுதலை வரலாற்றில் மறக்க முடியாத ஒரு அத்தியாயமாகும்.

---

● ஆசிரியருக்கு

## ஒரு கல்லில் நாலு மாங்காய்!

கடந்த 14.1.76 தேதிய 'சுதந்திரன்' இதழில் 'தமிழர் திருநாளன்று துக்கதின அனுட்டானம்?' என்றுகேட்டிருந்தீர்கள். ஒரே கல்லிலேயே நாலு மாங்காய்களை அடித்து வீழ்த்தும் அரசின் சாணக்கியம் புரியவில்லையா உங்களுக்கு?

ஜனவரி 15ந் தேதியை, தோழர் சூவின் துக்கநாளாகப் பிரகடனப்படுத்தியதன் மூலம் —

(1) சீனுவிலும், சீன மக்களிலும்தான் எவ்வளவு "வாரப் பாடு" வைத்திருக்கிறேன் என்பதைச் சிங்கள அரசு காட்டிக்கொள்கிறது.

(2) ஏற்கெனவே விடுதலை நாளாகப் பிரகடனப்படுத்திய நாளையே மீண்டும் விடுதலை (துக்க) நாளாக அறிவிப்பதன் மூலம், அதிகப்படி ஒரு நாளை வீணுக்கத் தேவையில்லையல்லவா?

(3) தமிழனின் கொண்டாட்ட நாளை, 'தேசிய துக்க தினம்' என அறிவிப்பதால் அவனுக்கு நாசூக்காக ஒரு 'குட்டு' வைத்துவிடுவதாகிறது.

(4) பொங்கல் திருநாளைத் துக்கநாளாக அறிவித்ததை எதிர்த்து எந்த ஒரு தமிழனே, தமிழ்அமைப்புகளோ குரல் கொடுத்தால், சுலபமாக 'தமிழன் சீனுவுக்கு எதிரானவன்' என்ற அபிப்பிராயத்தை (அதிலும், முக்கியமாகத் தமிழன் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள இந் நேரத்தில்) ஏற்படுத்திவிடலாம்!

15ந் தேதிதான், சீனுவிலும் துக்கதினம். — எனவே. இங்கும் அந்த நாளையே துக்கதினமாக்கினோம்' — என்று அரசு 'சாட்டுச்' சொல்லலாம். ஆனால் ஒரு பேச்சுக்கு, 15ந்தேதி பொங்கலுக்குப் பதில் 'வெசாக்' என்று வைத்துக்கொள்வோம் என்ன நடந்திருக்கும்?

—தங்கதேவன்,
கொழும்பு-6.

---

## இ. தொ. கழக உறுப்பினர்களும் தாக்கப்பட்டனர்!

சடந்த 8-1-76ல் தொழிலாளர்கள் சம்பந்தமாக மஸ்கெலியா பொலிஸ் நிலையம் சென்றஜ.தொ.கா.பிரதிநிதியொருவர் பொலிஸ் நிலையப் பொறுப்பாளரால் அவதூருகப் பேசப்பட்டு, தாக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து மஸ்கெலியா வானமலை பிரிவைச் சேர்ந்த கழக உறுப்பினர்கள் நால்வர் அதே தோட்டத்தில் கொண்டு போய் 150 தொழிலாளர்கள் மத்தியில் பகிரங்கமாக மஸ்கெலிய பொலிஸ் நிலையப் பொறுப்பாளரால் கடுமையாகத்தாக்கப்பட்டு, காயங்களுக்கு உள்ளாகி விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இது விடயமாக மஸ்கெலியா மாவட்டக் கழக அமைப்பாளர் திரு. மு. நடராஜமூர்த்தி கழகத் துணைத் தலைவர் திரு. வி. என். நவரட்ணம் பா. உ. அவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து 10-1-76 அட்டன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு விசாரணை நடத்தியுள்ளார்.

---

# தமிழ் மாணவர்க்கு சிங்களத்தில் விளக்கப் படம்!

தொழில் சட்டக் கல்லூரிகளுக்கான 1976ம் ஆண்டுக்குரிய இறுதிப் பரீட்சை டிசம்பர் மாதம் 27ம் திகதி தொடக்கம் சனவரி 8ம் திகதி வரைக்கும் நடைபெற்றது. இதில் கட்டட அமைப்பு மாணவர்களுக்காக "கட்டடம் அமைப்போர் கணியங்கள் I" என்ற பாடம் (6-1-1975ல்) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இப்பாடத்திற்கு யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்திலிருந்து தமிழில் ஏறக்குறைய எண்பது மாணவர் தோற்றினர்கள். இதே போல் கட்டுப்பெத்தை வளாகத்திலும் தமிழில் ஐம்பது (50) மாணவர்கள் தோற்றியிருப்பார்கள்.

மூன்று வருடகாலமாக தூய தமிழில் கல்வி கற்ற இந்தத் தமிழ் மாணவர்களுக்கு மேற்கூறப்பட்ட பாடத்தில் தரப்பட்ட விளக்கப்படம் (House Plan) சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே குறிக்கப்பட்டிருந்தது. ஆனல் வினுத்தாள் தமிழில் மட்டும் கொடுக்கப்பட்டது. இங்கு கேட்கப்பட்ட வினுயாது எனத்தெரியாது மாணவர்கள் பெரிதும் கஷ்டமுற்ருர்கள். ஏன் இந்தப் பாரபட்சம்? என்று மாணவர் குமுறினர்.

. ஏற்கெனவே என். சி. ஜீ. ஈ. பரீட்சையில் சித்திரப் பாடத்தில் தமிழ் மாணவர்களுக்கான விஞத்தாளில் சிங்கள, பௌத்த மதம் பற்றிய சொற்கள் புகுத்தப் பட்டதை சுதந்திரன் ஏற்கெனவே 7—1—76 புதன் இதழில் அம்பலப்படுத்தியிருந்தது.

நீர்கொழும்பில் நடைபெற்ற இதே பரீட்சையின் போது, கேத்திர கணித பொறிமுறை வரைதல் பாடத்திற்கு தமிழ் மாணவர்களுக்கு வரை படத்தாள் (Graph Paper) கொடுக்கப் படவில்லையென்றும், சிங்கள மாணவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டதாகவும் ஒரு மாணவர் தெரிவித்தார்,

---

## 'நேர்மையாளர்...

—1-ம் பக்கத் தொடர்

மாணிக்கவாசகரின் மறைவுச்செய்தி கேட்டதும் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் கூட்டணிப் பணிமனையில் தமிழர் கூட்டணிக் கொடி, தமிழரசுக்கட்சிக் கொடி ஆகிய இரண்டும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன. இதே போல மன்னர், வவுனியா, திருகோணமலை, கொழும்பு போன்ற இடங்களிலும் தமிழ் மக்கள் துக்கம் அனுட்டித்தனர். யாழ்ப்பாணத்திலும் பல இடங்களில் வெள்ளை, கறுப்புக்கொடிகளைக் காணக்கூடியதாயிருந்தது.

17-1-76 சனி மாலை நடைபெற்ற இறுதிக்கிரியைகளிலும், இறுதி ஊர்வலத்திலும் தமிழர் கூட்டணித்தலைவர்களான திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம், வி. தர்மலிங்கம், செ. இராசதுரை, முன்னுள் மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம், அ. தங்கத்துரை ஆகியோர் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்தினர். திரு. மாணிக்கவாசகரின் சகோதரரான கல்குடா பா. உ. திரு. தேவநாயகமும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டார்.

மறைந்த தலைவர் தமது 10 பிள்ளைகளையும் மனைவியையும் விட்டுச்சென்றுள்ளார்.

---

## தமிழ் தியாகிகளுக்கு மன்னரில் அஞ்சலி!

1974ம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில், பொலிசாரின் அட்டூழியத்தால் உயிரிழந்த தியாகிகளின் நினைவாக, அன்னதானம் வழங்கும் வைபவம் மன்னரில் சிறப்பாக—நடந்தேறியது. மன்னர் பட்டின இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சி மன்னர் சாவற்கட்டுப்பகுதியில் 11-1-75 அன்று நடந்தேறியது. பெருந்தொகையான மக்கள் பங்குகொண்ட இந்த வைபவத்தைத் தொடக்கி வைத்த வைத்தியசிரோண்மணி திரு. யோண்மார்க் ஜே, பி. அவர்கள் தமிழீழம் காண்பதில் இளைஞர்கள் முன்னின்று உழைக்க வேண்டுமெனக்கேட்டு இளைஞர்கள் முயற்சியைப் பாராட்டிப் பேசினர். மன்னர் பங்குக்குரவர் அருட்திரு. ஜெபநேசன் அவர்கள் அன்னதானத்தை ஆசீர்வதித்து, அங்கு குழுமியிருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் வழங்கினர்.

---

● சுதந்திர நாடுகள் — 3.

# லீச்சென்ஸ்ரயின்

ஆக 60 சதுரமைல் விஸ்தீரணமுள்ள இந்த நாடு அவுஸ்திரியாவுக்கும், சுவிற்சலாந்துக்கும் அண்மையில் உள்ளது மாட்டுப் பண்ணைகளையும், சிறுகைத் தொழில்களையும் கொண்டு, செல்வம் கொழிக்க சுதந்திரமாய் வாழ்கிருர்கள். இங்கே படை, பட்டாளங்களும் கிடையாது.

தலை நகரத்தில் 3000 பேர் வரையில் தான் வசிக்கிருர்கள். நாடு பூராவும் 2800 மாணவர்களும் 100 ஆசிரியர்களும் தான் உளர்.

யாழ்ப்பாணத்திலுள்ள 4 பாடசாலைகளில் அந்த நாட்டிலும் அதிகமான மாணவர்களும், ஆசிரியர்களும் இருக்கிருர்கள். அப்போது தமிழ் ஈழம் ஏன் தனி நாடாகச் சிறந்தோங்க முடியாது?

தீவுப்பகுதிகளின் விஸ்தீரணமும் லீச்சென்ஸ்ரயின் நாட்டின் விஸ்தீரணமும் கிட்டத்தட்டச் சரியாயிருக்கும்.

—சிவாசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

# நினைவுச் சின்னம் சிதைக்கப்பட்டது சதிவேலையா

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில், தமிழ் மொழியின் இனிமையில் தம்மை மறந்திருந்த தமிழர் கூட்டத்துள்; வேங்கைப் புலிகளெனப் புகுந்திட்ட வெறியர்களின் வெறியாட்டத்தின்போது அநியாயமாக உயிரிழந்த 12 பேருக்கும் நிறுவப்பட்ட நினைவுச் சின்னம் கடந்த ஆண்டு சிதைக்கப்பட்டது, யாவரும் அறிந்ததே, தமிழர்தம் சொந்த நிலத்தில், இறந்துவிட்ட தியாகிகளுக்குக்கூட நினைவுச் சின்னம் நிலைநாட்ட முடியாத அளவுக்கு அடிமைகளாகிவிட்டார்கள் என்பதையே இது காட்டியது.

ஆனல், பூத்துவிட்ட புது வருடம் தமிழரது எண்ணத்தில், செயலில் புத்துணர்ச்சியை மலரச் செய்தது. இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளை உறுப்பினர்கள் சிதைக்கப்பட்ட நினைவுச்சின்னத்தைப் புதுமெருகோடு கட்டிமுடிக்க முனைந்து நின்றனர். தளபதி அமிர்தலிங்கத்தின் தலைமையில் இரவோடு இரவாக நினைவுச்சின்னம் வளர்ந்தது. 10ம் திகதி அதிகாலையில் பார்த்தோர் அதிசயிக்கும் வண்ணம் பத்தடி உயரமான 'கொங்கிறீற்' தூண் வானேக்கி நின்றது. பொது மக்கள் மலரஞ்சலி செய்ய. இந்து கிறீஸ்தவ சமய முறைப்படி மறைந்த தியாகிகளின் ஆத்மசாந்திக்காக வழிபாடுகள் நடைபெற்றன.

இத்தனையும் நிகழும்போது; வீரசிங்கம் மண்டபத்தின் அயலில் இருக்கும் 'பெற்ரேல்' நிலையத்தின் முன்னல், ஆயுதந்தாங்கிய பொலிசார் காவல் கிடந்தனர். 'கூடிநின்ற மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படாதா, எம் கைவரிசையைக் காட்டமாட்டோமா?' என்று ஏங்கித் தவித்தனர். பாவம் ஏமாந்து விட்டனர்! அவர்களுக்கு ஒருவேலையுமே வைக்காது பூரண அமைதியோடு மக்கள் நடந்து கொண்டனர். தலைவர்கள் சொல்லைத் தலையேற்றுக் கொண்டு, கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு தவருது இயங்கினர்.

புதுப்பொலிவோடு திகழ்ந்த நினைவுச் சின்னத்தைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போயினர் மக்கள் பொலிசார் மத்தியிலோ பொருமைத் தீ பரவியது. இதன் எதிரொலி 12-1-76 இரவு பூரணமாகத் தெரிந்தது.

அன்றிரவு 9 மணியளவில் இளைஞர் பலர் சென்று, நினைவுத்தூணைச்சூழ அரளித் தடிகள் நட்டு வந்தனர். அழியாத சின்னத்தை அமைத்து விட்டோம் எனப் பெருமிதம் கொண்டனர் இளைஞர்கள். ஆனல், 13ந் தகதி காலை அங்கு கொடுமையின் எல்லையைக் கண்டனர் மக்கள். பனியிலும் வெயிலிலும் நின்று படாத பாடுகள்பட்டுக்கட்டியெழுப்பப்பட்ட நினைவுச் சின்னம், விஷமிகள் சிலரால் மூன்று துண்டுகளாய் உடைக்கப்பட்டு, நிலத்திலே உருட்டப்பட்டுக் கிடந்தது. யார் செய்த கொடுஞ் செயலிது? இறந்த தியாகிகளுக்குக்கூட, நினைவுச்சின்னம் எழுப்பிடத் தமிழர்க்குஉரிமையில்லையா? எவ்வளவு திமிர்பிடித்த செயல்? இதன் பின்னணியில் செயற்பட்டவர்கள் யார்?

12-1-76 இரவு ஒரு மணியளவில் நடந்த சதிவேலை என்ன? நினைவுச்சின்னத்தின் அண்மையில் உள்ள 'றீகல்' படமாளிகையில் இரண்டாவது ஆட்டம் முடிந்து வெளியே வந்த மக்கள் கூட்டம் நீலக்காற்சட்டையணிந்து, தலையிலே லேஞ்சி கட்டிய குண்டர்கள் சிலரால், துரத்தியடிக்கப்பட்டனர். படமாளிகை ஊழியர் ஒருவர், பிரம்படி பட்டுத் துடித்துத் துடித்து ஓடினுர். அவ்வீதியால் போக்குவரத்துச்செய்வதற்கும் முடியாதபடி மக்கள் தடுக்கப்பட்டனர்; யாழ். அஞ்சல் அலுவலகத்தின் முன்பாகவும் மேற்படி குண்டர்கள் மக்களை விரட்டி அடித்தனர்.

நினைவுத்தூண் சங்கிலி ஒன்றினுல் பிணைக்கப்பட்டு 'டிறக்' ஒன்றில் இணைத்து இழுத்து விழுத்தப்பட்டதாம்.

இத்தனை சதிச் செயல்களையும் செய்யும் துணிவும்— வாய்ப்பு வசதிகளும் சாதாரணப் பொது மக்கள் எவருக்காவது கிடைக்குமா? பகிரங்க வீதியில் நடந்து செல்பவர்களை படக்காட்சி முடிந்து வீடு செல்லவேண்டியவர்களைத் தடுக்கவும், அடிக்கவும் கூடியவர்கள் யார்? கேவலம், மரணமடைந்தவர்களுக்காக நிறுவப்பட்ட நினைவுச்சின்னத்தைக் காணப் பொறுக்காது, நொருக்கித்தள்ளிய குண்டர்கள், பொலிஸ் படையைச் சார்ந்தவர்களாகவே இருக்கவேண்டும் என்று, பாதிக்கப்பட்ட பொது மக்கள் பரவலாகப் பேசிக் கொள்கிருர்கள்.

தமிழன், தமிழீழத்திற்ருன் தன்மானத்தோடு வாழலாம் என்பதை இடித்துக்காட்டும் சம்பவமாகவே இது அமைந்துள்ளது.

—வாமதேவன்

### நினைவுச் சின்னத் . . .

—1-ம் பக்கத் தொடர்

பட்டது இது இரண்டாவது தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் பற்றி திரு. கதிரவேற்பிள்ளை தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-

"இலங்கை அரசாங்கத்தின் இனவெறி இப்போது தென்னுபிரிக்க இனவெறியையும மிஞ்சிவிட்டது. தென்னுபிரிக்காவில் அந்த வெறி தோல் மட்டத்தில் மட்டுமே நின்றது. ஆனல் இங்கு இனவெறி ஆள் மட்டத்துக்கு வந்து விட்டது. தமிழினத்தின் தனித்துவத்தை அழிப்பது மட்டுமல்ல — தமிழினம இந்நாட்டில் வாழ்ந்த சுவடுகூட இல்லாமல் அந்த நினைவையே அழிக்க சிங்கள இனவெறி முயற்சிக்கிறது.

இந்தப்படுமோசமானஇனவெறியே தமிழ்த் தியாகிகளின் நினைவுச் சின்னத்தையே அழிக்கும்அளவுக்குக் காட்டுமிராண்டித்தனமாக மாறியுள்ளது."

# காக்கிச் சட்டைக் காடையர்களின் நள்ளிரவுச் சின்னத்தனம்!



இடித்துத் தள்ளி விட்டார்களாம்!

இன்பதமிழ் கேட்கவந்து இன்னுயிரைப்பலி தந்த எங்கள் உடன்பிறப்புக்களுக்கு சனவரி 10ம் நாள் நம் இளைஞர்கள் நட்ட நினைவுச்சின்னத்தை இடித்துத் தள்ளிவிட்டார்களாம்!

அது இடிந்து கிடக்கும் பரிதாபக் கோலத்தைத்தான் மேலேயுள்ள படம் எடுத்துக் காட்டுகிறது!

நினைவுச் சின்னத்தை நாம் நாட்டும்போது நேரில் வந்து தடுத்திட—நம்மைக் கைதுசெய்திட — வக்கற்றதுகள்—வகையற்றதுகள் — திராணியற்றதுகள் — இரவோடிரவாக முக்காடுபோட்டு வந்து முறித்தெறிந்து விட்டு போயிருக்கிருர்கள் அச்சின்னத்தை!

பத்துத் தமிழர்கள் அன்று பதைபதைத்திட துடிதுடித்திடப்படுகொலைக்காளாகுவதற்கு காரணமாக இருந்த அதே இனவெறிக் காடைக்கூட்டம்தான்— அந்தத் தமிழர்களின் நினைவுச் சின்னத்தைக் கூட நிலைக்கவிடுவதில்லையென்று வெறி பிடித்து சதியாட்டம் போடுகிறது!

காக்கிச் சட்டையைக் கழற்றிவிட்டு வந்து நள்ளிரவில் சின்னத்தின் மீது கன்னம் வைத்து சின்னத்தனம் புரிந்திருக்கிறது!

இறந்தவர்களின் நினைவாக நாட்டியுள்ள நினைவுச் சின்னத்தை உடைத்தெறிவது சராசரி மனிதன் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத மிகமிகக் கேவலமான சின்னத்தனம் அன்றிவேறென்ன?

கொள்ளுப்பிட்டியில் தமிழ்ப்பகைவனும் சிங்கள இனவெறியனுமான பிக்கு ஒருவனுக்கு நினைவுச் சின்னம் வைத்து அவனுக்கு ஆண்டாண்டுதோறும் அஞ்சலி செலுத்துபவர்கள்—தமிழ்த்தியாகிகளுக்கு தமிழ் ஈழத்தில் வைக்கும் சின்னத்தை திட்டமிட்டு உடைத்தெறிய முற்பட்டிருக்கிருர்கள்!

இரண்டாவது முறையாக நம் இரத்தத்தின் இரத்தங்களின் நினைவுச் சின்னம் உடைத்தெறியப்பட்டிருக்கிறது.

இனவெறி பிடித்து அலையும் காடையர்களே! உங்களை எச்சரிக்கிருேம்! படையும் பட்டாளமும், அதிகாரமும் ஆள் அம்பும் உங்களிடம் இருக்கலாம்! ஆனல் கொதிப்பேறியிருக்கும் தமிழ் இளைஞனின் உணர்ச்சியோடு விளையாடாதீர்கள்!

அவர்கள் வெறிகொண்ட வேங்கைகளாகிவிட்டார்கள் என்பதை மறவாதீர்கள்!

தமிழனுக்கு உயிர்பெரிதல்ல — தன்மானம்தான் பெரிது என்பதை தியாகி சிவகுமாரன் நிரூபித்துச் சென்றதை அதற்குள்ளாகவா மறந்துபோனீர்கள்?

தம்பி சிவகுமாரனுடன் மோதிப் படுதோல்வியடைந்த நீங்கள் இப்போது இறந்தவர்களின் நினைவுச் சின்னத்தை உடைப்பதில்தான் உங்கள் சூரத்தனத்தைக் காட்டுகிறீர்களா?

நள்ளிரவில் வந்து யாருக்கும் தெரியாமல் 'டிறக்'கினுல் மோதி நினைவுச்சின்னத்தை உடைப்பது ஒரு பெரிய வீரம் என்ரு கருதுகிறீர்கள்?

எங்களுக்கு ஓர் உண்மை நன்ருகத்தெரிகிறது!

எங்கள் தமிழ் ஈழம் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடாக இருப்பதனுல்தான் தமிழ் ஈழத்தில் உங்களால் இவ்வளவு தூரம் வெறியாட்டம் ஆட முடிகிறது!

சிங்கள ஏகாதிபத்தியத்தை தமிழ் ஈழத்திலிருந்து தூள்தூளாக நொறுக்குவதற்கு நாங்கள் துணிந்துவிட்டோம்!

தமிழ் ஈழத்தை சுதந்திர நாடாக்குவதற்கு எங்கள் உயிரையும் அர்ப்பணிக்க நாம் எப்போதும் தயாராக இருக்கிருேம்!

சிங்கள இனவெறியர்களே! தமிழ் ஈழத்தில் உங்கள் ஆட்டம் நீண்டநாட்கள் நீடிக்காது! இதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்!

நாம் மீண்டும் தமிழ்த் தியாகிகளுக்கு நினைவுச் சின்னத்தை அதே இடத்தில் கட்டியெழுப்பியே தீருவோம்!

உங்களுக்கு துணிவிருந்தால் அப்போது எங்களைக் கைதுசெய்யுங்கள்! உங்களால் தடுக்க முடிந்தால் அதைத்தடுங்கள்!!

அதைத் தடுத்தால் ஆயிரம் இடங்களில் ஆயிரம் நினைவுச்சின்னங்களை சட்டவிரோதமாக நிறுவுவோம்! அப்போது உங்கள் சட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுப்பாருங்கள்!

அதை விடுத்துக்கோழைகள் போல நள்ளிரவில் நினைவுச் சின்னத்துக்குக் 'கன்னம்' வைக்காதீர்கள்!

—கோவை

தை மாத சுடர் விற்பனையாகிறது
விலை ரூபா ஒன்று.

திருக்குறள்—உரையுடன்

500 மில்க்வைற் நீல சோப் அல்லது 50 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவற்காரத்தொழிலகம்
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜனவரி மாதம் 21-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org